அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்
## ஆண்டு 10

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
20

சுட்டெண்: | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. மெய்யெழுத்துகள் எல்லாம் புள்ளி பெறுமென முதன்முதல் கூறிய நூல்
   1. நன்னூல்
   2. தொல்காப்பியம்
   3. தண்டியலங்காரம்
   4. நிகண்டு

2. பிரித்தானியர் ஈழத்துக்கு வந்ததன் நோக்கம்
   1. கல்வி
   2. ஆய்வு
   3. வணிகம்
   4. சுற்றுலா

3. கிழமை, நிலவு, மாதம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. பரிதி
   2. புவி
   3. இடம்
   4. திங்கள்

4. உலகை இணைக்கும் பாலமாக விளங்குபவை
   1. ஊடகங்கள்
   2. நூல்கள்
   3. விழாக்கள்
   4. காடுகள்

5. முல்லை நிலத்துக்குரிய உரிப்பொருள்
   1. ஊடல்
   2. புணர்தல்
   3. பிரிதல்
   4. இருத்தல்

6. பொன் + தாமரை என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. பொன்தாமரை
   2. பொற்றாமரை
   3. பொற்தாமரை
   4. பொட்டாமரை

7. தேவாரங்கள், திருவாசகங்கள் இயற்றப்பட்ட காலம்
   1. சங்ககாலம்
   2. சங்கமருவிய காலம்
   3. பல்லவர்காலம்
   4. சோழர்காலம்

8. கடல் என்ற சொல்
   1. காரண இடுகுறிப்பெயர்
   2. காரணப்பெயர்
   3. காரணச் சிறப்புப்பெயர்
   4. இடுகுறிப்பெயர்

9. இல்வாழ்வில் மேலோங்கி நிற்கும் பண்பு
   1. பணம்
   2. விருந்தோம்பல்
   3. பொருள்
   4. விளையாட்டு

10. ஈடுகட்டுதல் என்ற மரபுச்சொற்றொடர் குறிப்பது
   1. பிற்போடுதல்
   2. வீண்செலவு
   3. சரிசெய்தல்
   4. விடாப்பிடி

11. 'உண்மையில் இலங்கை ஒரு பிரிவுபட்ட நாடே' எனக் குறிப்பிட்டவர்
   1. பி. எச். பாமர்
   2. கால்டுவெல்
   3. வீரமாமுனிவர்
   4. யி.யூ.போப்

12. மாவீரர்களின் ஈகத்துக்குச் சான்றாக விளங்குபவை
   1. பதுக்கைகள்
   2. பரல்கள்
   3. நடுகற்கள்
   4. மயிற்பீலிகள்

13. ய், வ் என்பன
   1. வினா எழுத்துகள்
   2. சுட்டெழுத்துகள்
   3. உயிரெழுத்துகள்
   4. உடம்படுமெய் எழுத்துகள்

14. வெள்ளத்தால் அழியாது; வெந்தணலில் வேகாது; கொள்ளையடிக்க முடியாது; கொடுத்தாலும் குறையாதது
   1. உறையுள்
   2. கல்வி
   3. பணம்
   4. உடை

15. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட நாடு
   1. சிங்கப்பூர்
   2. மலேசியா
   3. இந்தியா
   4. மியான்மார்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

16. தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முதல் கறுப்பினத் தலைவர்
    1. மகாத்மா காந்தி
    2. நெல்சன் மண்டேலா
    3. பிடெல் கச்ரோ
    4. ஆபிரகாம் இலிங்கன்

17. எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலைகள்
    1. கிறு, கின்று
    2. த், ட், ற், இன்
    3. கிறு, வ், இன்
    4. ப், வ்

18. புரவலர்கள் என்ற சொல்லின் பொருள்
    1. புலவர்கள்
    2. கவிஞர்கள்
    3. மன்னர்கள்
    4. குடிமக்கள்

19. இளங்கோவடிகள் அறநெறிக்காலத்தில் சிலப்பதிகாரத்தை இயற்றினார். இது
    1. செய்வினைச் சொல்லியம்
    2. செயப்பாட்டுவினைச் சொல்லியம்
    3. குறிப்புவினைச் சொல்லியம்
    4. பிறவினைச் சொல்லியம்

20. குதிரையை அடக்குவதற்கு அதன் முகத்தோடு பிணைக்கப்பட்ட தோற்பட்டி
    1. கற்பதுக்கை
    2. கடிவாளம்
    3. எழினி
    4. மயிற்பீலி

21. எங்கும் பரவுதல் என்ற பொருள் தரும் உவமைத் தொடர்
    1. வெய்யில் முன் பனி போல
    2. நகமும் சதையும் போல
    3. காட்டுத் தீ போல
    4. நீர் மேல் எழுத்துப் போல

22. நீங்கள் தமிழில் பேசுங்கள். என்பது
    1. கூற்றுச் சொல்லியம்
    2. வினாச் சொல்லியம்
    3. ஏவற் சொல்லியம்
    4. மெய்ப்பாட்டுச் சொல்லியம்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

23. மக்கள் புலம்பெயர்வதற்கான காரணங்களுள் ஒன்று
    1. புகழ்
    2. போர்
    3. பேராசை
    4. பெருமை

24. இலக்கணப் போலியாக அமையும் சொல்
    1. முன்றில்
    2. கால்வாய்
    3. இல்முன்
    4. கொம்புநுனி

25. பேரறிவு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. பெரு + அறிவு
    2. பேர் + அறிவு
    3. பெரும் + அறிவு
    4. பெருமை + அறிவு

26. சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட தமிழர் இடங்களுள் ஒன்று
    1. கொழும்பு
    2. கண்டி
    3. கந்தளாய்
    4. காலி

27. கி. பி. 9ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசாட்சியை வீழ்த்தி ஆட்சிக்கு வந்தவர்கள்
    1. சேரர்
    2. சோழர்
    3. பாண்டியர்
    4. பல்லவர்

28. நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்று
    1. பரதம்
    2. சிற்பம்
    3. ஒயிலாட்டம்
    4. ஓவியம்

29. பூவின் தொகுதியைக் குறிக்கும் மரபுப்பெயர் கொத்து. அதுபோலப் பல்லின் தொகுதியைக் குறிப்பது
    1. கட்டு
    2. கூட்டம்
    3. குவியல்
    4. வரிசை

30. திருக்குறள் கூறும் அறத்தின் இயல்புடைய மூவருள் ஒருவர்
    1. தெய்வம்
    2. பெற்றோர்
    3. ஆசிரியர்
    4. உறவினர்

30 X 1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பிரித்தானியரால் கொண்டு வரப்பட்ட ‘டொனமூர் அரசியல் யாப்பு’ எதற்குக் காரணமாக அமைந்தது?

2. தொல்காப்பியத்தில் பிறப்பியல் என்ற இயல் எதைப் பற்றிக் கூறுகிறது?

3. செய்தித்தாள்களின் பயன்பாடு ஒன்றை எழுதுக.

4. இன்றைய அரங்கேற்ற அரங்குகளில் காணப்படும் புதுமைகளுள் ஒன்றை எழுதுக.

5. தரப்பட்டுள்ள தொடர்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

   கண்ணும் கருத்தும்:

   பளபள:

6. தரப்பட்டுள்ள பெயர்ச்சொல் வகைகளுக்கு இவ்விரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

   சினைப்பெயர்: 1.

   2.

   குணப்பெயர்: 1.

   2.

7. உருபு ஏற்காத வேற்றுமைகள் எத்தனை? அவை எவை?

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

நீரில்லாமல் இவ்வுலகம் இயங்காது. இதனைத் திருவள்ளுவர், 'நீரின்றி அமையாது உலகம்' எனக் கூறுகிறார். உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கும் உழவுத்தொழில், மின் உருவாக்கம், கைத்தொழில் போன்ற பல தேவைகளுக்கும் நீர் இன்றியமையாதது. இன்று நீர் வளம் குறைந்து கொண்டு வருகிறது. மக்களின் தேவைகள் அதிகரிப்பதே இதற்கு முதன்மைக் காரணமாகிறது. அத்துடன் காலநிலை மாற்றம், இயற்கை அழிவுகள், மக்களின் பொறுப்பில்லாத நீர்ப் பயன்பாடு போன்றவையும் நீர் வளம் குறைவதற்குக் காரணங்களாக அமைகின்றன. இந்நிலையைத் தடுக்க நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். காட்டு வளங்களைப் பேணுதல், நீரைச் சேமித்தல், தேவையற்ற நீர்ப்பயன்பாட்டைத் தவிர்த்தல் போன்றவற்றைச் சிந்தித்துச் செயலாற்றினால் நீர் வளம் குறைவதைத் தடுக்கலாம். இல்லையெனில், எதிர்காலத்தில் நாம் வறட்சி, பஞ்சம், போன்ற பல விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

Akilan is very good at studying. He studies his residential school subjects and Tamil lessons every day. He also does his homework regularly. Akilan has his Tamil exam tomorrow. He has studied the subjects in Tamil well and memorized them. He is not worried about the exam. He is confident that he could do well in the exam. So, he went to sleep peacefully that night.

**யேர்மனி:**

Akilan ist sehr gut im Lernen. Täglich lernt er für die Fächer aus der deutschen und tamilischen Schule. Er macht auch seine Hausaufgaben ordentlich. Morgen findet für Akilan eine Tamil Sprachprüfung statt. Er hat alle Kapitel aus dem Tamil-Lehrbuch gelernt und verinnerlicht. Er machte sich keine Sorgen über die Prüfung. Er war zuversichtlich, dass er die Prüfung gut bestehen würde. Deshalb schlief er in dieser Nacht ruhig ein.

**நோர்வே:**

Akilan er veldig flink på skolen. Hver dag studerer han både skolefagene og tamil. Han gjør også hjemmeleksene ordentlig. I morgen skal Akilan ha eksamen i tamil. Han har lest alle kapitlene og memorert alt godt. Han er ikke bekymret for eksamen. Han var sikker på at han ville gjennomføre eksamen bra. Derfor gikk han og sov med fred og ro.

**இத்தாலி:**

Akilan è molto bravo negli studi. Studia quotidianamente le lezioni della sua scuola locale e le lezioni Tamil. Lui fa anche regolarmente i compiti. Per Akilan domani si terrà l'esame di lingua Tamil. Lui ha studiato molto bene gli argomenti nel libro di Tamil, e gli ha impressi nella mente. Non è preoccupato per l'esame. Lui era fiducioso di poter scrivere bene l'esame. Per cui quella notte andò a dormire tranquillo.

**நெதர்லாந்து:**

Akilan is heel goed in studeren. Iedere dag leert hij naast zijn gewone schoolvakken ook Tamils. Hij doet netjes zijn huiswerk. Akilan heeft morgen de Tamil toets. Hij bestudeerde de onderwerpen in het Tamil goed en leerde de onderwerpen uit zijn hoofd. Hij heeft geen zorgen over de toets. Hij heeft het vertrouwen dat hij de toets goed gaat maken. Daarom ging hij die avond rustig slapen.

**டென்மார்க்:**

Akilan er meget god til studier. Han studerer både han alle fag i skolen og tamilsk hver dag. Han laver også sine lektier regelmæssigt. Akilan har tamilsk eksamen i morgen. Han har studeret pensummet på tamilsk rigtig godt og lært dem udenad. Han har ikke været bekymret for eksamen. Han har været overbevist om, at han kunne klare sig godt til eksamen. Derfor gik han roligt i seng den nat.

**சுவீடன்:**

Akilan är duktig på att studera. Han studerar skolämnen och tamil varje dag. Han gör även läxorna ordentligt. Akilan kommer ha tamilprov imorgon. Han har läst och memorerat kapitlen i tamilboken. Han är inte orolig inför provet. Han är säker på att han kommer klara provet. Därför somnade han lugnt den natten.

**பின்லாந்து:**

Akilan on erittäin hyvä opinnoissa. Hän opiskelee kotikoulun aineita ja tamilia joka päivä. Hän tekee myös läksynsä säännöllisesti. Akilan on tamilitesti huomenna. Hän on oppinut tamili aineita hyvin ja se jäänyt mieleensä. Hänellä ei ole huoli kokeesta. Hänellä oli uskoa, että hän osaa kirjoittaa kokeen hyvin. Joten hän meni nukkumaan rauhassa sinä yönä.

**தமிழ்**

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. என்னுயிர்த் தாயே! என்று தொடங்கி, ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

2. படத்துக்கான கவிதையை ஆறு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



3. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

செய்யும் வேலை எல்லாம் திருத்தமாகச் செய்தால்
உய்ய வழியும் ஆகும் ஊரும் புகழ்ந்து பேசும்
வாடித் துன்பத்தாலே மடிய நேர்ந்த போதும்
கூடிப் பிரிந்திடாமல் குழைந்து வாழ வேண்டும்

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. நடுகல்வழிபாடு
2. தமிழிலக்கிய வரலாற்றில் சோழர் காலம்
3. போரும் விளைவுகளும்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - போர்கள் நடப்பதற்கான காரணங்கள்
   - தமிழீழ விடுதலைப் போர்
   - இன்று உலகில் நடந்து கொண்டிருக்கும் போர்களும் விளைவுகளும்

4. நான் கண்ட ஒரு கனவு

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - வெவ்வேறு வகைக் கனவுகள்
   - என்னால் மறக்க முடியாத கனவு
   - அந்தக் கனவு தந்த உணர்வுகள்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

## 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

உடல்நலம் பேணுவதற்கு உடற்பயிற்சி செய்தல் வேண்டும். இது பல வகைப்படும். அவற்றுள் நீச்சல் என்பதும் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும். எந்த ஒரு கருவியையும் பயன்படுத்தாமல், உடல் உறுப்புகளின் அசைவின் மூலம் தண்ணீருக்குள் நகரும் ஒரு கலையே நீச்சலாகும். நீர்நிலைகளில் தவறி விழுந்து, பலர் உயிரிழக்கும் செய்திகளை நாம் அவ்வப்போது அறிகின்றோம். முன்பு பெரும்பாலும் குளிப்பதற்கு ஆறுகள், கிணறுகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளே பயன்பட்டன. எனவே, உயிரைப் பாதுகாத்துக்கொள்ள நீச்சல் தெரிந்திருப்பது கட்டாயத் தேவையாக இருந்தது. அதனால், சிறுவர்களுக்குப் பெரியவர்கள் நீச்சலைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்று பெரும்பாலான வீடுகளில் குளியலறைகளைக் கட்டும் வழக்கம் உள்ளதால், நீச்சல் பயிற்சியை மேற்கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. அதனால், நீச்சல் கலையைப் பயில்வதற்குச் செயற்கையாகக் கட்டப்பட்ட நீச்சல் குளங்களைப் பயன்படுத்துகிறார்கள். இக்கலையானது, அதிக பயன்களைத் தரக்கூடியது. உடல் எடையைக் குறைக்கவும் நாம் விடும் மூச்சைச் சீராக்கவும் நீச்சல் கலை பெரிதும் உதவுகிறது.

1. நீச்சல் கலையைப் பயில்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு எழுதுக

2. முன்பு நீச்சல் தெரிந்திருப்பது ஏன் கட்டாயத் தேவையாக இருந்தது?

3. நாம் அவ்வப்போது அறியும் செய்திகள் எவை?

4. இன்று நீச்சல் கலையைப் பயில்வதற்கு எவற்றைப் பயன்படுத்துகிறார்கள்?

5. நாம் ஏன் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்?

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 நாட்குறிப்பை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.

### குழலியின் நாட்குறிப்பு

14.05.2023 ஞாயிற்றுக்கிழமை

காலையிலிருந்தே நானும் என் அண்ணாவும் மிகவும் மகிழ்வுடன் இருந்தோம். ஏனெனில், இன்று அன்னையர் நாள். எங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய எங்கள் அம்மாவை மகிழ வைக்கும் நாள். அவர் விரும்பும் பூ செவ்வந்தி. அதனால், மஞ்சள் நிறச் செவ்வந்திப் பூக்கள் வைத்து கட்டப்பட்ட பூங்கொத்தை நேற்றே வாங்கி வைத்தோம். நாங்கள் இருவரும் அம்மாவுக்கு அன்னையர் நாள் வாழ்த்துச் சொல்லி, அப்பூங்கொத்தை அவருக்குக் கொடுத்தோம். அம்மா அன்புடன் எங்களை அணைத்து முத்தமிட்டார்.

1. குழலியும் அண்ணாவும் அம்மாவுக்கு அன்னையர் நாள் வாழ்த்துச் சொன்னார்கள். (      )
2. அம்மா விரும்பும் பூ மஞ்சள் நிறச் செவ்வந்தி. (      )
3. குழலியும் அவளது தங்கையும் அம்மாவை மகிழ வைத்தார்கள். (      )
4. அவர்கள் வாங்கி வைத்த பரிசுப் பொதியை அம்மாவுக்குக் கொடுத்தார்கள். (      )
5. அம்மா இருவரையும் அன்புடன் அணைத்து முத்தமிட்டார். (      )

5 X 1 = 5 புள்ளிகள்

**குறிப்பு:**

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |